நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.47/2021
அரசு தரப்புக்காக அ. சா.7 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Dr. ராமச்சந்திரன் | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 12 | | | |

எதிரி ஆஜரில் இல்லை. மனு தாக்கல் அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of March 2026.

**<u>முதல் விசாரணை</u>**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 11.08 )

நான் தற்போது காட்டுமன்னார்கோயிலில் அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 04.07.2020 அன்று மதியம் 03.00 மணி காட்டுமன்னார்கோயிலில் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது 108 ஆம்புலென்ஸ் மூலம் சுமார் 42 வயது மதிக்கத்தக்க ஆண் நபர் ஒருவரை அழைத்து வந்தனர். அவருடைய பெயர் செந்தில் த.பெ.ராமலிங்கம் அவரிடம் விசாரித்தபோது கத்தியால் தன்னை அடையாளம் தெரிந்த நபர் ஒருவர் அவர் வீட்டிற்கு வெளியே 2.30 மணிக்கு குத்திவிட்டதாக சொன்னார். அவரை பரிசோதனை செய்தபோது 3 இடங்களில் கத்தி குத்து காயங்கள் இருந்தது.

1. வயிற்று பகுதியில் இடது புறத்தில் 2 inch x1 cm x 2 inch ஆழமான காயம் காணப்பட்டது.

2. இடது பக்கம் விலாவின் இடது பக்கம் மேல் புறத்தில் 2x1x3 cm அளவுள்ள ஒரு குத்து காயம் காணப்பட்டது.

3. முதுகு புறத்தில் வலது பக்கம் L2, L3 பகுதிக்கு அருகில் 2x2x1 cm அளவுள்ள குத்துக்காயம் காணப்பட்டது.

முதல் உதவி செய்து மேல் சிகிச்சைக்காக கடலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் கொடுங்காயங்கள் என்று சான்று அளித்து நான் வழங்கிய விபத்து பதிவேடு நகல் இதுதான் அந்த **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

அதே தேதியில் சுமார் 35 வயது மதிக்கத்தக்க பெண் எழிலரசி க.பெ.செந்தில் என்பவர் அதே 108 ஆம்புலென்ஸ் மூலம் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். அவரை பரிசோதித்தபோது அவர் அடையாளம் தெரிந்த நபரால் அவருடைய வீட்டிற்கு அருகே 2.30 PM மணிக்கு கத்தியால் குத்தப்பட்டதாக தெரிவித்தார். அவருக்கு

1. வயிற்றில் இடது புறம் தொப்புள் அருகில் ஆழமான 2x2x1 inch குத்து காயம் இருந்தது.

முதல் உதவி செய்து மேல் சிகிச்சைக்காக கடலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று அளித்தேன். (அந்த விபத்து பதிவேடு நகல் இதுதான் அந்த **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலிசார் என்னை விசாரித்தார்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 11.23)

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.